நீங்கயர் முறைக் கொள்ள வேண்டும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 422839, 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6598 1990 மே 26 சனிக்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambigas
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

# புலிகளுடன் நடத்தும் பேச்சு புனித கடமை

## நாடாளுமன்றத்தில் ஹமீது

## தான் விழுங்கப்பட்டாலும் கவலைப்படமாட்டாராம்

கொழும்பு, மே 25

நாட்டில் உள்ள பாரதூரமான பிரச்சினை ஒன்றை தீர்ப்பதற்காக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை புனிதமான கடமையாக கருதுகிறேன் என்று நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸீ. எஸ். ஹமீது நாடாளுமன்றத்தில் கூறினார்.

தான் புலிகளினால் விழுங்கப்பட்டாலும் படாவிட்டாலும் புனித பணி ஒன்றை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் பிரஸ்தாபித்தார்—

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் வியாழக்கிழமை நடைபெற்றது— அதில் பேசுகையிலேயே அமைச்சர் ஜனாப் ஹமீது மேற்கண்டவாறு சொன்னார்—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம் பி திரு ரிச்சர்ட் பத்திரன, "அமைச்சர் ஹமீது புலி வாலை பிடித்திருக்கின்றார்— அந்த வாலை அவர் கைவிடும்போது புலி அவரை விழுங்கிவிடும்" என்றவாறு சபையில் பேசினார்—

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசும்போதே அமைச்சர் ஹமீது மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் கூறியதாவது—

வடக்கு கிழக்கு பிரச்சினை 50 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்ததாகும். அரச சபையில் கூட இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டது.

எனவே இந்தப் பிரச்சினையை ஒரே இரவில் தீர்த்து விட முடியாது.

இந்தியப் படை வெளியேறி இரண்டு மாதங்கள் தான் கழிந்துள்ளன. இதற்கிடையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என இங்கு நீங்கள் விமர்சிக்கிறீர்கள்.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் பேச்சு வார்த்தை மூலம் எவரும்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பிஜியிலுள்ள இந்திய தூதரகம் மூடப்பட்டது

புதுடில்லி, மே 25

பிஜியின் தலைநகரான சுவாவில் இயங்கிய இந்திய தூதரகம் நேற்று மூடப்பட்டது.

24 மணி நேரத்துக்குள் இந்த தூதரகத்தை மூட வேண்டும் என்று பிஜி அரசு, இந்திய அரசைக் கேட்டிருந்தது. இந்த கோரிக்கைக்கிணங்கவே மேற்படி தூதரகம் மூடப்பட்டது.

எவ்வாறாயினும் பிஜி அரசாங்கம் இந்தியா மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய் என்று பிஜியிலுள்ள இந்திய தூதரக பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச்செய்தியை அகில இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பியது.

(ண—வ)

## கருத்து மோதல்களால் சபையில் அமளிதுமளி

ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று பலத்த கருத்து மோதல்கள் ஏற்பட்டன. இதனால் சுமார் 20 நிமிடங்கள் சபையில் அமளி துமளி நிலவியது.

எதிர்க்கட்சித் தலைவரின் செயல்பாடு தொடர்பாக ராஜாங்க அமைச்சர் பிரஸ்தாபித்த போதே எதிர்க்கட்சியினருக்கும் ராஜாங்க அமைச்சருக்கும் இடையே பலத்த கருத்து மோதல் ஏற்பட்டது.


நிதி ஒதுக்கீடுகள் சட்ட வரைவு மீதான விவாதத்தில் பேசிய ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் அஸ்வர் கூறியதாவது—

பொது வாழ்க்கையில் நேர்மையையும், ஒழுக்கத்தையும் நிலைநாட்டுவதற்கு ஜனாதிபதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் முன் மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கட்டளையிட்டுள்ளார்.

எப்பொழுதுமே இல்லாத

(2ஆம் பக்கம் பார்க்க)



முதல்வருடன் சந்திப்பு

சென்னையிலுள்ள இலங்கைப் பிரதித் தூதுவர் திரு வீ கே வல்சன் கடந்த 17ஆம் திகதி தமிழக முதல்வர் திரு மு கருணாநிதியைச் சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

(ண)

## ஜனாதிபதி இன்று திறந்துவைப்பார்

கொழும்பு, மே 25

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரந்தம்பை நீர்த்தேக்கத் திட்டத்தை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இன்று சனிக்கிழமை மாலை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்.

பிரதமர் திரு டி பி விஜேதுங்க, காணி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு பீ தயாரத்ன, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் திரு சந்திரா பண்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் நாளை கண்டி விஜயம்

கொழும்பு, மே 25

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கண்டி மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களையும் சந்திப்பார்.

இச்சந்திப்பு கும்பளை சாஹிரா கல்லூரியில் நாளை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர் நம்பிக்கை நிதியம் சுயதொழில் கடன் உதவி

கொழும்பு மே 25

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சுய தொழில் உற்பத்திகளில் ஈடுபடுவதற்காக எவ்வித பிணையுமின்றி கடனுதவி வழங்கப்படும்—

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கம் வகிக்கும் சுமார் 20 லட்சம் ஊழியர்கள் இதனால் நன்மையடைவர்—

சுய வேலைவாய்ப்பு திட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, மே 25

## அனாவசியமாக கேள்வி எழுப்புவதனாலேயே நான்

## கொள்ளையருக்கு

வேலைநிறுத்தம்

கொழும்பு, மே 25

கொழும்பு — பொரளை சிறுவர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் நேற்று ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

டாக்டர்களுக்கான விடுதி அறைகளில் அஸ்பத்திரி உபகரணங்கள் போடப்பட்டுள்ளன. இதனால் புதிதாக வரும் டாக்டர்களுக்கு தங்கும் இட வசதி இல்லை.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே டாக்டர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தலையிட்டு மூடப்பட்டிருந்த ஆஸ்பத்திரி விடுதி அறைகளை டாக்டர்களுக்கு மீண்டும் பெற்றுக் கொடுத்தனர்.

இதனையடுத்து டாக்டர்கள் தமது அடையாள வேலை நிறுத்தத்தை கைவிட்டனர்.

(ண-வ)

# எழுப்புவதாலேயே நான் பதிலளிக்க மறுத்தேன்

— ரஞ்சன்

கொழும்பு, மே 25

புலிகள் சம்பந்தமாக சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க நான் மறுத்தேன். அனாவசியமாக கேள்வி எழுப்புவதாலேயே நான் அப்படிச் செய்தேன். அமைச்சர் ஒருவர் அப்படி பதிலளிக்க மறுக்கலாம் என எர்ஸ்கின்மே குறிப்பிட்டிருக்கிறார்.

தோட்டத் தொழில் துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதைத் தவிர நான் இந்த சபையையோ சபாநாயகரையோ அவமதித்து செயல்படவில்லை என்றும் அவர் கூறினார்.

திரு தர்மசிறி சேனாநாயக்க— நீங்கள் வெளிநடப்பு செய்தீர்கள்.

அமைச்சர்— இல்லை. பதிலளிக்க மறுத்ததை அடுத்து அத விடயத்தில் எனது கடமை முடிந்து விட்டது. எனது அடுத்த கடமைகளைக் கவனிப்பதற்காகவே நான் வெளி

(2 ஆம் பக்கம் பார்க்க)

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சோமண்ணை



அப்ப டாக்டர்மாருக்கு மீன்டும் ஜலதோஷம் பிடிக்கிது எண்டு சொல்லுங்கோவன்.

பத்திகளில் ஈடுபடுவதற்காக எவ்வித பிணையுமின்றி கடனுதவி வழங்கப்படும்.

அரசாங்கம் இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

## தென் இந்திய சஞ்சிகைகள் சிலவற்றிற்கு தடை

யாழ்ப்பாணம், மே 24

தென்னிந்திய தமிழ் சஞ்சிகைகள் சிலவற்றை யாழ் குடாநாட்டில் விற்பனை செய்வதற்கு விடுதலைப் புலிகள் தடை விதித்துள்ளனர்.

கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்தும் முகமாகவும் உள்ளூர்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு ஊக்குவிப்பு அளிக்கும் நோக்கத்துடனேயே இத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

(ண-ந-120)

# கொள்ளையருக்கு கோடரி வெட்டு

கொழும்பு, மே 25

இராணுவ பாணியிலான உடை அணிந்து வீடொன்றில் அத்துமீறிப் புகுந்த கொள்ளையிட முயன்ற கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு மாவெல என்ற இடத்தில் நிகழ்ந்தது.

வீட்டாரை பயமுறுத்தி கொள்ளையிட முயற்சித்த வேளையில் அங்கு இருந்த ஒருவர் கொள்ளையரை கோடரியினால் வெட்டினார் என்று மாவெல பொலீஸார் நடத்திய விசாரணையில் இருந்த தெரிய வருகிறது.

இச்சம்பவத்தை அடுத்து கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஏனையோர் தப்பி ஓடி விட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மாவெல பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எம் ஆர் பண்டார தலைமையிலான பொலீஸ் கோஷ்டி விசாரணை செய்து வருகிறது.

(ண-மு)

# எம். பி. மீது தாக்குதல்: நடவடிக்கை வேண்டும்

— எதிர்க்கட்சி கொரடா

கொழும்பு, மே 25

நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுதியான சிராவஸ்தியில் நாடாளுமன்ற உறுப்பினரை தாக்கி அவமானப்படுத்திய பொலீஸாருக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதைத் தவிர்க்க முடியாது.

எதிர்க்கட்சிக் கொரடாவான திரு ரிச்சட் பத்திரன நேற்று நாடாளுமன்றத்தில் இப்படித் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பிரதி சபாநாயகர் திரு காமினி பொன்சேகா தலைமையில் சபை கூடிய போது சிராவஸ்தியில் எம் பி ஒருவர் தாக்கப்பட்ட விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீ ல சு கட்சி உறுப்பின

(2ஆம் பக்கம் பார்க்க)

# இன விகிதாசார ரீதியில் ஆசிரியர்கள் தெரிவாவர்

கொழும்பு, மே 25

இன விகிதாசார அடிப்படையில் முதலாம் தர ஆசிரியர்களாக 437 பேரும், இரண்டாம் தர ஆசிரியர்களாக 1750 பேரும் தெரிவு செய்யப்படுவர்.

எதிர்வரும் திங்கள் 28, செவ்வாய் 29 ஆகிய இரு தினங்களிலும் இந்த நியமனங்களுக்கான தெரிவு கொழும்பில் நடைபெறும்.

இதே வேளை மூன்றாம் தர ஆசிரியர்களாக 1500 பேர் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். இத்தெரிவுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேலும் கடந்த 19, 20ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட முதலாம் தர தமிழ் முஸ்லிம் ஆசிரியர்களுக்கான நேர்முக தெரிவு மீண்டும் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறும்.

குறிப்பிட்ட தினங்களில் இடம் பெற்ற தெரிவில் 12 பேர் சமுகம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தகவலை கல்விச் சேவை ஆணைக் குழுவின் உதவிச் செயலாளர் திரு யு அபய குணசேகர தெரிவித்தார்.

(ண-ந-கு)

# மதகுரு ஒருவர் தடுப்பு காவலில்

கொழும்பு மே 25

கதிர்காமம் பகுதியில் ஒரு விகாரையின் பிரதம பௌத்த குரு கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

விகாரையில் தேடுதல் நடத்திய பொலீஸார் துப்பாக்கிகள், தோட்டாக்கள் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் மூன்று லட்சத்து 97 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

மேலும் மூன்று பெண்களும் விகாரையில் தங்கியிருந்ததைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து தமக்கு நெஞ்சு வலிப்பதாக மேற்படி பௌத்த குரு கூறியதால் அவர் சிகிச்சைக்காக பொலீஸ் காவலுடன் கதிர்காம ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

முறைப்பாடு ஒன்றைத் தொடர்ந்து அம்பாந்தொட்டை உதவி பொலீஸ் அதிபரின் பணிப்பின் பேரில் நடத்தப்பட்ட பொலீஸ் விசாரணையின் போதே ஆயுதங்களும் பணமும் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ண-032)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

கூ. மொ. விற்பனை நிலையம்

# 1,14,750 தொன் சீனி

# கடந்த ஆண்டு இறக்குமதி

கொழும்பு மே 23

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம கடந்த ஆண்டு 1,14,750 மெட்ரிக் தொன் சீனியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.

அது உள்நாட்டில் இருந்து 2 ஆயிரத்து 729 மெட்ரிக் தொன் வெள்ளைச் சீனியைக் கொள்வனவு செய்தது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய பதற்ற நிலையினால் கந்தளாய், செவனகல, பெலவத்தை இங்குரான ஆகிய தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தி ஓரளவு வீழ்ச்சி கண்டது.

இதையடுத்தே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம பெருந்தொகையான சீனியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.

நாட்டின் சீனி உற்பத்தி 1988 ஆம ஆண்டு 53,321 மெட்ரிக் தொன்களுக்கு 83 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது.

எனினும 1989 ஆம ஆண்டு 53,983 மெட்ரிக் தொன்களுக்கு ஒரு சதவீத அதிகரிப்பை மாத்திரமே பதிவு செய்தது.(ஐ—ண—ர

## கருத்து மோதல்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

வகையில் வி ஐ பி உயர் அதிகாரிகளின் பிரயாணப் பொதிகள் கூட விமான நிலையத்தில் பரிசோதனைக்குட்படுத்தப் பட வேண்டும என்பதை செயலில் காட்டியவர் ஜனாதிபதி திரு பிரேமதாச,

லஞ்ச ஊழல்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும அதேவேளையில் தனிப்பட்ட குரோதம காரணமாக பொய்யான முறைப்பாடுகளை செய்பவர்களுக்கு எதிராகவும கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும. நிரபராதிகள் பாதுகாக்கப்படுவர்.

இப்படி அல்ஹாஜ் அஸ்வர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவி வெளிநாடு செல்லும போது தனது மகளை (அனுரா பண்டாரநாயக்காவை) எதிர்க்கட்சி பதில் தலைவராக கடிதம மூலம நியமித்து விட்டுச் சென்றார், "அங்கே குடும்ப ஆதிக்கம ஏற்பட்டுள்ளது" என்று ராஜாங்க அமைச்சர் கூறியபோது—

எதிர்க்கட்சிப் பதில் முதல்வர் திரு அனுரா பண்டாரநாயக்கா உட்பட எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும அதனை வன்மையாக ஆட்சேபித்தனர்,

இதனால் எதிர்க்கட்சி உறுப் அமைச்சருக்கும இடையில் பலத்த கருத்து மோதல் ஏற்பட்டது, சபையில் அமளிதுமளி ஏற்பட்டது, சபை நிகழ்ச்சிகள் 20 நிமிடங்களுக்கு தடைப்பட்டது.

அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரை அகௌரவப்படுத்தும வகையில் கூறியவற்றை வாபஸ் பெறவேண்டும, என திரு தர்மசிறி சேனாநாயக்கா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்,

அப்போது சபைக்கு தலைமை தாங்கிய அமைச்சர் திரு ஜோன் அமரதுங்க சபையில் அமைதியை ஏற்படுத்த பெரும சிரமங்களை மேற்கொண்டார்,

இறுதியாக ராஜாங்க அமைச்சர் தமது கூற்றை வாபஸ் பெற்றபின் சபையில் அமைதி ஏற்பட்டது.

(ண—ய)

## லலித் நாளை...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

27ஆம திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கண்டி மாவட்ட ஐ தே கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ ஆர் எம ஏ காதர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்,

கண்டி மாவட்டத்தில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம பாடசாலைகளின் தற்காலிக அதிபர்கள் சுமார் 500 பேர் இந்த சந்திப்பின் போது தங்களது குறைகளை எடுத்துக் கூறுவர்,

மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பி பி திசாநாயக்கா, மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சர் திரு எஸ் கே இராமநாதன் உட்பட மற்றும எம பிக்களும இச்சந்திப்பில் கலந்து கொள்வர்.

(ண—ழ—017)

## எம். பி. மீது...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

ரான திரு ஜகத் மஹிந்த அதிகாரி (தெக்கிராவ) தான பொலிஸாரால் தாக்கப்பட்ட சமபவத்தை சபையில் விவரித்தார், அவர் கூறியதாவது—

பிட்ட சபை முதல்வர் திரு ரணில் விக்கிரமசிங்க இவ்விடயம சமபந்தமாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் விசாரணை செய்து வருகின்றார் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்தும்

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை

## புறக்கணித்தால் மோதல்

— மன்சூர்

கொழும்பு, மே 25

தமிழ் மக்களின் அபிலாஷைகளை தொடர்ந்தும புறக்கணித்தால் இந்த நாட்டில் மீண்டும மோதல்கள் ஏற்படும.

வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் நாடாளுமன்றத்தில் இப்படிக் கூறினார்.

அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும கூறியதாவது—

வடக்கு - கிழக்கு பகுதிகளில் பாடசாலைகள், கச்சேரிகள் இயங்கினாலும ஏனைய பகுதிகளைப் போல் நிர்வாகம இன்னமும சீராகவில்லை.

சென்னையில் வைத்து கலாநிதி பதியுதீனுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது புலிகள் முஸ்லிமகளின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டனர். ஒப்பந்தமும செய்து கொண்டனர்.

ஆனால் இன்று அந்த ஒப்பந்தத்திற்கே முரணாக செயல்படுகின்றனர்.—

முஸ்லிமகள் தனித்துவமுள்ள சமூகம என திரு சேனாதிராஜா இங்கு குறிப்பிட்டார். அதனைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

திர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு இனப் பிரச்சினைக்கு அடிப்படையாக உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(ந—ற)

## புலிகளுடன்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

எந்தப் பிரச்சினையையும தீர்க்கவில்லை,

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பல்வேறு சமூகங்கள் வாழ்கின்றன, எனவே சகல சமூகங்களையும திருப்திப்படுத்தியே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருக்கிறது- இப்படியான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றங்களும ஏற்படலாம்; பின்னடைவுகளும ஏற்படலாம படிப்படியாக தொடர வேண்டிய முயற்சி இதுவாகும- நிதானத்துடனும தீர்க்கதரிசனத்துடனும இதனை நாம அணுக வேண்டும—

அதிகார பரவலாக்கல் செய்யும போது மாகாண சபைகளுக்கு சில சட்டங்களை அமுலாக்கும அதிகாரங்களை வழங்க வேண்டியிருக்கிறது.

அப்போது தமிழ் தாயகப் பிரச்சினை ஏற்படுகிறது. இது சிக்கலான பிரச்சினை,

சபாநாயகர்- வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றிய பிரச்சினையின் நிலை என்ன?

ஜனாப் ஹமீது- அதுவும ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இந்த நாட்டில் எந்தக் கட்சியும எந்தக் குழுவும இந்தப் பிரச்சினை தீரக்கூடாது என நினைப்பதில்லை, மோதல்களை எவரும விருமபவில்லை.

நான் புலிகளின் வாலைப் பிடித்துக் கொண்டு இருப்பதாக கூறுவோர் இறுதியில் உணர்வார்கள், யார் புலிகளின் வாலை பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று?

இப்படி அவர் கூறினார்.

[ண—ங—ல—ற]

## அமெ. பரிசு

கொழும்பு, மே 23

அமெரிக்காவின் கௌரவம மிக்க கவிதைப் போட்டியில் இலங்கைப் பெண் அல்ப்ரடா டி சில்வாவுக்குப் பரிசு கிடைத்திருக்கிறது—

[ல—032]

## இனப் பிரச்சினை தற்போது தேசிய

## பிரச்சி[illegible]பாக மாறியுள்ளது

— இரத்தினராஜா

கொழும்பு, மே 25

இனப் பிரச்சினை முன்னர் தமிழ் மக்களுக்கு மட்டுமே இருந்தது. தற்போது அது தேசிய பிரச்சினையாக மாறியுள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் யாழ் மாவட்ட எம பி திரு எஸ் இரத்தினராஜா நாடாளுமன்றத்தில் இப்படிக் கூறினார்,

அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தச் சட்டம தமக்கு பாதகமானது என மக்களில் ஒரு சாரார் உணர்ந்தால் அவர்கள் பிரிந்துவாழ நினைக்கக் கூடும என அப்போது திரு லெஸ்லி குணவர்த்தன கூறினார்.

இன்று நாம அவர்கள் கூறியவற்றை கண்கூடாக காண்கிறோம.

அதிகாரத்தை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்ட தலைவர்கள் இப்படித்தான் தமிழ் மக்களை [illegible] வந்துள்ளனர்.

அதன் பின்னர் [illegible]


இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சிதருகிறது

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
2-30, 6-00, 9-30

கொன்கோட் (தெஹிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

மனோகரா (யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00

ரஜனிகாந்த் — கௌதமி
பேபி ஷாலினி — வி கே ராமசாமி
நடித்த
ஏ வி எமமின்
ராஜா
சின்ன
ரோஜா
(கலர்)

2 வது வாரம

முருகன் (ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

ஈரோஸ்

பட்டுள்ளது என்று ராஜாங்க அமைச்சர் கூறியபோது—

எதிர்க்கட்சிப் பதில் முதல்வர் திரு அனுரா பண்டாரநாயக்கா உட்பட எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதனை வன்மையாக ஆட்சேபித்தனர்.

இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ராஜாங்க

## ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார, மகாவலி அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திரு காமினி அத்துகோரளை ஆகியோர் உட்பட மற்றும் பல அரச பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர்.

மேற்கு ஜெர்மனி சார்பில் ஜெர்மன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு சிங்பையிட் லேன்ஸ் உட்பட பல வெளிநாட்டு பிரதிநிதிகளும் இவ்விழாவில் கலந்து கொள்வர்.

மேற்கு ஜெர்மனியின் உதவியுடனேயே இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ண-வ)


தினபதி
சிறு விளம்பரம்

### மௌலவி தேவை

தேவஹுவ மத்ரஸாவில் குர்ஆன் ஓதிக் கொடுக்க 30 வயதிற்கு மேற்பட்ட மௌலவி ஒருவர் தேவை. மூன்று நேர உணவுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு- தலைவர், அல் மத்ரஸதுல் ஜலாலியா அரபிக் கல்லூரி, தேவஹுவ.

033260


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரான திரு ஜகத் மஹிந்த அதிகாரி (கெக்கிராவ) தான பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவத்தை சபையில் விவரித்தார். அவர் கூறியதாவது—

கடந்த புதன் இரவு கெக்கிராவையில் எனது தொகுதி மக்களை சந்தித்து விட்டு சிராவஸ்திக்கு வந்தேன். அப்போது அங்கு கடமையில் இருந்த ராஜ கருணா, ஆர் டி ரதனாயக்க ஆகியோருடன் மற்றும் சில பொலிஸாரும் சேர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை நிந்தித்து பரிகாசம் செய்யும் வகையில் பேசினர்.

அதுமட்டுமன்றி எவ்வித காரணமும் இன்றி என்னையும் தாக்கினர். இதனால் எனது மூக்கிலும், மார்பிலும் காயங்கள் ஏற்பட்டன.

இது தொடர்பாக சபாநாயகருக்கும் அறிவித்துள்ளேன். இதே வேளை என்னைத் தேடி வந்த எனது நண்பர் ஒருவரும் பொலீஸாரினால் வன்மையாக தாக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நிரபராதியான எனது நண்பர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தாக்கிய பொலீஸார் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

இச்சம்பவம் எனக்கு மட்டுமல்ல இந்த நாடாளுமன்றத்திற்கே ஏற்படுத்தப்பட்ட அவமானமாகும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை மீறும் வகையில் நடந்து கொண்ட பொலீஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் —

இப்படி திரு மஹிந்த அதிகாரி சபையில் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கவலை அடைவதாக குறிப்பிட்ட சபை முதல்வர் திரு ரணில் விக்கிரமசிங்க இவ்விடயம் சம்பந்தமாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் விசாரணை செய்து வருகின்றார் எனத் தெரிவித்தார்.

உறுப்பினரின் முறைப்பாடு தொடர்பாக சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக பிரதி சபாநாயகர் உறுதியளித்தார். (ண-ய)

## அனாவசியமாக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யேறிச் சென்றேன்.

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது—

புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறி அமைச்சர் ஹமீதுக்கும் எனக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முயற்சிக்கிறது.

எமது அரசின் அமைச்சர்கள் அவரவருடைய பொறுப்பு எல்லைகளை நன்றாக உணர்ந்தே செயல்படுகிறார்கள்.

ஜனாப் ஹமீதின் விடயங்களில் நான் தலையிடுவதில்லை. ஆனால் நாம் அமைச்சரவையில் எல்லா விடயங்களையும் கலந்துரையாடுகிறோம்.

ஈ பி ஆர் எல் எப் இயக்கத்துடன் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதையிட்டு புலிகள் இயக்கம் கோபமடைந்துள்ளது.

ஆனால் எந்த ஒரு இயக்கத்தையும் நாம் தனிமைப்படுத்த முடியாது. அரசாங்கம் ஒன்று என்ற ரீதியில் தனித்தனி கட்சிகளினதும், குழுக்களினதும் விருப்பத்தின்படி நாம் செயல்பட முடியாது.

ஈ பி ஆர் எல் எப் இயக்கம் முன்னர் பல தவறுகளைச் செய்தாலும் பின்னர் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறியது.

ஈழப் பிரகடனம் செய்ய நிர்ப்பந்தம் ஏற்படுத்திய நிலைமைகளை அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். அதனைப் பற்றி அவர்கள் கவலையும் தெரிவித்தனர்.

முஸ்லிம்கள் தனித்துவமுள்ள சமூகம் என திரு சேனாதிராஜா இங்கு குறிப்பிட்டார். அதனைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இதுவரை இருந்த சகல அரசாங்கங்களும் முஸ்லிம்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

தொடர்ந்தும் தமமை ஏமாற்ற இடமளிக்கக் கூடாது என்றே புலிகள் ஆயுதம் ஏந்தினர்.

இன்று அவர்கள் ஜனாதிபதியை இந்த நாட்டு ஜனாதிபதியாக ஏற்றுள்ளனர். எனவே தமிழீழம் என்ற பிரச்சினைக்கே இடமில்லை.

1948ஆம் ஆண்டு தமிழ் மக்களிடம் பறிக்கப்பட்ட பிரஜா உரிமை இந்த அரசினால் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொழில் விடயத்தில் இனி மேல் அரசியல் தலையீடு இல்லை.

காணிப் பிரச்சினையைத்

## ஊழியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், சிறு கைத்தொழில்கள் போன்றவற்றை ஆரம்பிக்க விரும்பும் ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் இந்த கடனுதவி வழங்கப்படும்-

தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர் திரு பீ எம் பிரேமசந்திர இதனைத் தெரிவித்தார்-

அமைச்சர் திரு பிரேமசந்திரவினால் இது தொடர்பாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது-

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உள்ள நிதியை நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளை பெருக்குவதற்கும், ஊழியர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் பயன்படுத்துவதே சிறந்தது என்ற நோக்கில் நான் புதிய கடன் திட்டம் செயல்படுத்தப்படும் என்று

ளுமன்றத்தில் இப்படிக் கூறினார்.

அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது—

மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது இந்த நாட்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது வேற்றுமையாகும்.

1956ஆம் ஆண்டு அடுத்த இருண்ட ஆண்டாகும். அன்று தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டது.

இன்று நாம் அவர்கள் கூறியவற்றை கண்கூடாக காண்கிறோம்.

அதிகாரத்தை பெற்றுக் கொள்ள ஆணவப்பட்ட தலைவர்கள் இப்படித்தான் தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளனர்.

அதன் பின்னர் அண்மையில் நீங்கள் 6வது அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டு வந்தீர்கள் அதன் மூலம் ஜனநாயக உரிமைகளைப் பறித்துக் கொண்டீர்கள்.

6ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்ந்து அமுலில் இருந்தால் நாட்டில் ஜனநாயகம் இருப்பதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இப்படி அவர் கூறினார். (ந-ற)

### இலங்கை அரசியலில்

# முஸ்லிம்கள் பகடைக்காய்களாக் பயன்படுத்தப்படுகின்றனர்

**— அஷ்ரப்**

கொழும்பு, மே 25

இலங்கை அரசியலில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் பகடைக் காய்களாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்-

திகாமடுல்ல மாவட்ட எம் பியும், ஸ்ரீல மு கா தலைவருமான ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் இவ்வாறு நாடாளுமன்றத்தில் கூறினார்-

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசியதாவது-

கிழக்கில் 69 முஸ்லிம்களை கொலை செய்தது புலிகள் இல்லையா?

கல்முனையை எரித்தவர்கள் புலிகள் இல்லையா?

கடந்த 2 மாத காலமாக 50 முஸ்லிம் இளைஞர்களைக் கொன்று குவித்தது புலிகள் இல்லையா?

புலிகளினால் கைது செய்யப்பட்ட பல முஸ்லிம் இளைஞர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை-

மாண ஊர்வலத்தில் கூட எங்கே எங்களால் கலந்து

கூட கதைக்கப் பயப்படுகிறார்கள்- இதுவா அங்கு நடக்கும் ஜனநாயகம்?

புலிகளுக்குத் துணிவு இருந்தால் ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு மக்களிடம் செல்லட்டும் அப்போது யாருக்கு மக்கள் பலம் யாரை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது தெரியும்-

6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது புலிகளின் கொள்கை என்றால் ஆயுதத்தை வைத்துக் கொண்டு எப்படி ஜனநாயக வழிக்கு வரப் போகிறார்கள்-

கல்முனையில் பள்ளிவாசல்களில் உள்ள அரபு எழுத்துக்களை புலிகள் அழிக்குமாறு கூறி இருக்கிறார்கள்- கல்முனையில் உள்ள ஹிஜ்றா வீதியின் பெயர்ப் பலகையை எடுத்துவிட்டு வேறு பெயர் மாற்றியுள்ளனர்-

பெயர்ப் பலகையைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாத புலிகள் எப்படி முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

மூன்று சமூகத்தையும் காத்


2 வது வாரம்

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15. 6-15. 9-15
சனி/ஞாயிறு 10-15

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30. 6-00. 9-30
சனி/ஞாயிறு 10-30

சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30. 6-15. 9-15
சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டை காட்சிகளும், இனிமையான பாடல்களும் நிறைந்த சித்திரம்

அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த

**சங்கர் குரு**
(கலர்)

7 வது வாரம்

ஜெஸிமா
[கிராண்ட்பாஸ்]
2-00. 6-00. 9-30

வின்சர்
[யாழ்நகர்]
10-30. 2-30. 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**
[கலர்]

8 வது வாரம்

சமந்தா
(கொட்டாஞ்சேனை)
10-00. 2-00. 6-00. 9-30

பிரின்ஸ்
(ஹட்டன்)
2-30. 6-00
சனி/ஞாயிறு 10-30

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30. 2-30. 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்



# தேவை

மத்திய கிழக்கில் இயங்கும் நகை/மாணிக்கம் வியாபார ஸ்தாபனத்துக்கு பங்காளர் தேவை- தொடர்பு கொள்ளவும்-

இமேஜ் எட்வடைசிங்

# காதல் கிசுகிசுக்களைப் பற்றி கவலைப் படாத ராம்கி!

## கல்யாணம் செய்து கொள்வாரா?

அண்மையில் நடிகர் ராமகியை சந்தித்து உரையாடிய போது கிடைத்த சில சுவையான தகவல்கள் இதோ:—

நீங்கள் நிறைய படங்களில் நடித்து இருந்தும, கமல் ரஜனி சத்யராஜ் மாதிரி உங்களுக்கென்ற தனி பாணியை "இமேஜ்" ஏன் ஏற்படுத்திக் கொள்ளவில்லை?

நான் திரை உலகில் நுழைந்த போது தொடர்ந்து நடிகனாக இருப்பது எப்படி என்பதில்தான் கவனம செலுத்தினேனே தவிர, "இமேஜ்" வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை.

காரணம என் அப்பாவோ, அமமாவோ அல்லது குடுமபத்தில் யாராவதோ சினிமா நடிகனாகவோ, நடிகையாகவோ இருந்து இருந்தால் என்னால் "ஈசி"யாக நடிகனாக ஆகி இருக்க முடியும. "நடிகன்" அந்தஸ்தும உடனடியாக கிடைத்து இருக்கும.

ஆனால் எனக்கு அப்படிப்பட்ட எந்த வாய்ப்பும இல்லை. எனவே முதலில் என்னை நான் ரசிகர்களிடம அடையாளம காட்டிக் கொள்ள வேண்டியதாகி விட்டது—

எனவே நான் அதில்தான் முழுக் கவனமும செலுத்தினேன் பல படங்களில் — வந்த வேடத்தில் நடித்தேன். இவ்வளவு நாள் நடித்த பிறகு இப்போதுதான் "ராமகி" என்றால் யார்? அவன் எப்படி இருப்பான்? என்று ரசிகர்களுக்கு தெரிந்து இருக்கிறது.

ஆனால் "இமேஜ்" வளர்வதை நான் விரும்பவும இல்லை. "இவன் சண்டை போடுவதற்குதான் லாயக்கு" "அவன் "ஸ்டைல்" பண்ணதான் லாயக்கு" "அவனுக்கு காதலிக்கத்தான் தெரியும" என்று முத்திரை குத்திக் கொள்ள நான் ஆசைப்படவும இல்லை.

காரணம மற்ற வேடங்களுக்கு நான் லாயக்கற்றவன் என்று எண்ணத் தோன்றும. எனவே எனக்கு அது தேவை



ராமகி

கிறோம.

இதை தவறாக புரிந்து கொண்டு "காதல் — கத்திரிக்காய் என்று கிசுகிசுத்து விடுகிறார்கள். நான் இதைப் பற்றி கவலைப் படுவதே இல்லை.

எனக்கு இப்போது 27 வயதுதான் ஆகிறது. இப்போது திருமணம செய்வதாகவும இல்லை. 30 வயதில்தான் செய்வேன். ஆண் மகனுக்கு 30 வயதில் தான் "மெச்சூரிட்டி" வரும என்பது என் எண்ணம. அப்போதுதான் திருமணம செய்வேன்.


சத்தியமாக நடிகைகள் யாரையும திருமணம செய்ய மாட்டேன்.

இந்திப் படங்களில் நடிக்கிறீர்களா?

"இந்திப் படங்களில் நடிப்பதாக இல்லை. தெரியாத இடம — புரியாத பாஷை எனக்கு தேவை இல்லை. எனக்கு தமிழ்ப் படங்களே போதும.

ஆண்டவன் புண்ணியத்தில் நான் நன்றாகவே இருக்கிறேன். தினசரி 2 படங்களுக்கு "கால் ஷீட்" கொடுத்து நடித்து பட அதிபர்களிடம ஒத்துழைத்து "நல்ல நடிகன்" என்ற பெயரை பெற்று இருக்கிறேன். இதுவே போதும.

நான் திரை உலகில் சாதிக்க எனக்கு இன்னும வயதும, காலமும நிறைய இருக்கிறது. அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டும? மெல்ல மெல்லப் போவோமே... எனக்கென்ற ஒரு காலகட்டம வரும. அப்போது "சூப்பர்" ஆகி விட்டால் போகிறது என்றார். (இ—10)



# தெற்கு வர்த்தக வலயம் நிர்மாணவேலை ஜூனில்

## காணி சுவீகரிப்பு அடுத்த வாரம்

மாத்தறை மே 24

தென் மாகாணத்தில் ஆரமபிக்கப்பட உள்ள உத்தேச சுதந்திர வர்த்தக வலயத்தின் நிர்மாண வேலைகள் எதிர் வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது—

உத்தேச சுதந்திர வர்த்தக வலயம தொடர்பாக கொக்கலை பீச் ஹோட்டலில் கைத்தொழில் அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது—

சுதந்திர வர்த்தக வலயத்தின் கைத்தொழில் பேட்டைகள் வெலிகம தேர்தல் தொகுதியில் ஆரமபிக்கப்பட உள்ளன— இதற்காகப் போதிய காணிகளைச் சுவீகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது—

காணி சுவீகரிப்பு வேலைகள் அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படும—

சாலிமவுண்ட் தோட்டத்தில் இருந்து 300 ஏக்கரும் ரஜவத்தையில் 34 ஏக்கரும கொடவில தோட்டத்தில் 96 ஏக்கரும பின்னகொடவில் 35 ஏக்கரும குணுகவத்தையில் 75 ஏக்கரும் இவ்வாறு கைத்தொழில் பேட்டைகளுக்காக சுவீகரிக்கப்படவிருக்கின்றன—

வெலிகம உதவி அரசாங்க அதிபர் திரு ஆர் டி டி பிரான்சிஸ்கோ சுவீகரிப்புக்கான வேலைகளை மேற்கொண்டுள்ளார்—

இங்கு அமைக்கப்படவுள்ள கைத்தொழில் பேட்டைகளில் வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் போது பிரதேச இளைஞர் யுவதிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும—

இந்த ஆலோசனை கூட்டத்தில் தென்மாகாணமுதலமைச்சர் திரு எம எஸ் அமரசிரி, மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு எஸ் கே சந்திர சோமகாலி மாவட்ட அரசாங்க அதிபர் திரு பேர்சி அபேசிங்க, வெலிகம உதவி அரசாங்க அதிபர் திரு ஆர் டி டி பிரான்சிஸ்கோ ஆகியோரும கலந்து கொண்டனர்—

(ரி—430)

## மாத்தறை மாவட்டத்தில் இம்முறை

# 18,500 ஹெக்டயர் நெற் செய்கை

மாத்தறை, மே 24

மாத்தறை மாவட்டத்தில் இவ்வருட சிறுபோகத்தின் போது 18,500 ஹெக்டயரில் நெற் செய்கையை மேற்கொள்ள மாத்தறை மாவட்ட விவசாயக் கமிட்டி தீர்மானித்துள்ளது—

இதன் மூலம சிறுபோகத்தின் போது 38,586 மெட்ரிக் தொன் நெல் அறுவடை கிடைக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது—

மாத்தறை, வெலிகம, அக்குரஸ்ஸ, தெனியாய, தெவிநுவர, கமபுருப்பிட்டிய, ஹக்மனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் பெரிய நீர்ப்பாசன திட்டங்களின் மூலம 6,600 ஹெக்டயரிலும, சிறு நீர்ப்பாசன திட்டங்களின் மூலம 4,250 ஹெக்டயரிலும, மழை நீரின் மூலம 7,650 ஹெக்டயரிலும நெற்சாகுபடி செய்யவும எதிர்பார்க்கப்படுகிறது—

அத்துடன் விவசாயிகளுக்கு தேவையான உர வகைகள், விதை நெல், கிருமிநாசினிப் பொருட்கள் என்பவற்றை தட்டுப்பாடின்றி விவசாய சேவை நிலையங்களின் மூலம பெற்றுக் கொடுக்கவும, தேவையான விவசாயக் கடன் வசதிகளை உரிய காலத்தில் செய்து கொடுக்கவும மாத்தறை விவசாயக் கமிட்டி நடவடிக்கை எடுத்து வருகிறது—

[ரி—430]

## தொழில் செய்யும் மாணவர்:

### விடுமுறை வழங்குமாறு கோரப்படும்

கொழும்பு மே 25

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை

தமது தொழில்கள் பறிபோகும் என்ற பீதியினால் தாம பல்கலைக்கழகங்களுக்கு வர இயலாமல் இருப்பதாக இந்த



சாகாமம பாதையின் அவல நிலை

என்ற எண்ணத் தோன்றும். எனவே எனக்கு அது தேவை இல்லை. எல்லா வேடங்களிலும் நடித்து பாராட்டு பெறவே விரும்புகிறேன்.

அதற்காகவே சிலம்பு சண்டை முதல் நடனம் வரை எல்லாம் கற்று வைத்திருக்கிறேன்.

எல்லா வேடங்களிலும் என்றால்... வில்லனாக கூட நடிப்பீர்களா?

என் நடித்தால் என்ன தவறு. அந்தக் கேரக்டர் எனக்கு பிடித்து இருந்தால் – புகழைத் தேடித் தரும் என்றால் வில்லனாக நடிப்பதில் தவறு இல்லை.


இப்போது நான் 10 படங்களில் நடித்து வருகிறேன். 10 படமும் 10 விதமான கேரக்டர். இவற்றில் ஆபாவாணனின் "இணைந்த கைகள்" எனக்கு சூப்பர் படமாக அமையும்.

இந்த எல்லாப் படங்களும் இந்த ஆண்டில் வெளிவந்து விடும். எனவே என் திரை உலக வாழ்க்கையில் இந்த ஆண்டு மிகப் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தும்.

உங்களைப் பற்றி அடிக்கடி "அந்த நடிகையுடன் காதல் — இந்த நடிகையுடன் காதல்" "கிசுகிசு" வெளி வருகிறதே...

அதற்கு நான் என்ன செய்ய முடியும். நிரோஷா, நிஷாந்தி சீதா என்ற ஒவ்வொரு நடிகைகளுடனும் 5 படங்களில் தொடர்ந்து நடித்தேன். ஒரு படத்தில் நடித்தாலே பழக்கம் வந்துவிடும் நடித்தாலே பழக்கம் வந்துவிடும். 5 படங்களில் நடித்தால் சொல்ல வேண்டுமா? படப் பிடிப்பில் சிரித்துப் பேசி தமாஷ் செய்வது என்று சகஜமாக பழகிவிடு

## தினபதி சினிமா



காவலுக்கு வந்த தெய்வம் கடிக்குமாப் போல், காக்கிச் சட்டை போட்ட கனவான்களே கடமையை மறந்து கன்னிகளின் கன்னங்களை பதம் பார்க்க தொடங்கி விட்டால், யார் காவல் காப்பது?
(விஜயகாந்த் – கௌதமி) படம்: "சந்தனக் காற்று"
(இ-10)

# சுஹாசினி நடிப்பில்
## 'இதயத்தில் இருப்பவரே'



சுஹாசினி

ராஜசேகர் – சுஹாசினி நடித்து, முத்தியாலு சுப்பையா டைரக்ட் செய்து 100 நாட்கள் ஓடிய தெலுங்கு படம் "மமதல கோவிலா"

இந்தப் படம் "இதயத்தில் இருப்பவரே" என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளி வருகிறது.

கணவன் – மனைவி அன்பையும், தந்தை – மகன் பாசத்தையும் பற்றிய படம் இது.

இதய நோய் சிகிச்சைக்காக மனைவி அமெரிக்கா செல்லும் போது, கணவன் ஒரு கொலை வழக்கில் கைதாகி தண்டனைக்குள்ளாகிறான்.

மகனுக்கு தண்டனை விதிக்கப்பட்டது தெரிந்தால் மருமகள் இறந்து விடுவாள் என்று தந்தை தவிக்கிறார்.

உணர்ச்சிகரமான இந்த குடும்ப கதைக்கு ஆரூர்தாஸ் வசனம் எழுதியுள்ளார்.

சக்ரவர்த்தி இசை அமைக்க, முத்தியாலு சுப்பையா திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்துள்ளார்.

ஒய் ஹரிகிருஷ்ணா வழங்க, ஸ்ரீ கிருஷ்ணமகால் புரொடக்ஷன்ஸ் சார்பில் ஒய் ராஜலட்சுமி தயாரித்து இருக்கிறார்.

(இ-10)

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை பெற்றுக் கொடுக்குமாறு அவர்கள் தொழில் செய்யும் இடங்களின் சொந்தக்காரர்களிடம் கோரிக்கை விடுக்கப் படும்.

பல்கலைக்கழக அதிகாரிகள் இந்தக் கோரிக்கையை விடுக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் பலர் அரச, தனியார் துறைகளில் சேர்ந்து தொழில்களைப் புரிகின்றனர்.

என்ற பீதியினால் தாம் பல்கலைக்கழகங்களுக்கு வர இயலாமல் இருப்பதாக இந்த மாணவர்கள் அறிவித்திருப்பதாகவும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையைப் போக்கவும், தொழில் செய்யும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்காகவே இக் கோரிக்கை விடுக்கப்படும்.

[ரி-007]

## சாகாமம் பாதையின் அவல நிலை

அக்கரைப்பற்று – சாகாமம் பாதை அப் பகுதி மக்களின் போக்குவரத்துக்கு முக்கியமானது.

இப் பாதையில் தற்போது பெரியதோர் கிடங்கு ஏற்பட்டுள்ளது. இயற்கையின் தாக்குதல்களால் நாளாந்தம் ஆழமாகவும், அகலமாகவும் ஆகிவரும் இப் பொறிக் கிடங்கு இதுவரையில் பல விபத்துக்களைக் கண்டிருக்கிறது.

இங்குள்ள மக்கள் இதனால் பெரும் தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். மக்களின் தொல்லைகளுக்கு காரணமான கிடங்கையே படத்தில் காண்க.
[படம்: எம ஏ பகுர்தீன்]

(ரி-035)



## பா ஓதல் நிகழ்ச்சியில் முதலிடம்

பலாங்கொடை தமிழ்த் தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும், கொத்தணி கோதாவிலும் கோட்டக் கல்வி அடிப்படையிலும் அண்மையில் நடத்தப்பட்டன.

இம் மூன்று அரங்குகளிலும் முதலாம் பிரிவு பாஓதல் நிகழ்ச்சியில் போட்டியிட்டு ஒவ்வொன்றிலும் முதலாம் இடத்தைக் கைப்பற்றிய செல்வி பிரியா ஜெயராஜனையே படத்தில் காண்கிறீர்கள்.

[ரி-038]

குருநாகல், குளியாப்பிட்டி

# தொழில்நுட்ப கல்லூரிகளில்
## தமிழ்துறை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

குருநாகல் மே 18

குருநாகல் குளியாப்பிட்டி தொழில் நுட்ப கல்லூரிகளில் தமிழ் துறையொன்று ஆரம்பிக்குமாறு குருநாகல், புத்தளம் மாவட்ட தமிழ், முஸ்லிமகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த இரு தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் தமிழ் துறைகள் ஆரம்பிக்கப்பட்டால் கணிசமான அளவு தமிழ், முஸ்லிம மாணவர்கள் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

குருநாகல் புத்தளம மாவட்ட தமிழ் பேசும மாணவர்கள் தொழில் நுட்ப கல்வியை தமிழ் மொழியில் தொடர வேண்டும் என்றால் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கின்றது.

பொருளாதார மற்றும் போக்குவரத்து, கஷ்டங்களினால் இந்தப் பிரதேச தமிழ் துறை மாணவர்கள் தொழில் நுட்ப கல்வியை தொடர ஆர்வம் இருந்தும் வசதி வாய்ப்புக்கள் இல்லாததனால் கல்வியைத் தொடர முடியாதிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகளை இங்கு வாழ் தமிழ், முஸ்லிமகள் குருநாகல், குளியாப்பிட்டி தொழில் நுட்ப கல்லூரிகளில் தமிழ்துறையொன்றை ஆரம்பிக்க ஆவன செய்ய கோருகின்றனர்.

(ரி-138)


அனைத்தும் இலவசம்!

சவூதி அரேபியா

— 7 நாட்களில் பயணம —

★ வீட்டுப்பணிப்பெண்கள்

(வயதெல்லை 30—40)

பாஸ்போட் அளவு 6 படங்கள் (4 கலர்) உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

AMEEN ENTERPRISES

511—Prince of Wales Avenue
Colombo — 14.
Licence & App — 625/14/15/17/18/23

தினபதி

"தி தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4493
— 1990 மே 26 —

# உணவுப்பயிர் செய்கை பாதிப்புறாமல் காப்பு

## கன்னுறுவை தாவரவியல் சேமிப்பு வங்கி உதவும்

பேராதனையிலுள்ள கன்னுறுவையில் நிறுவப்பட்டுள்ள தாவரவியல் சேமிப்பு வங்கி நாட்டின் உணவு உற்பத்திக்கு பெரும் பங்கினை ஆற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானிய நிதி உதவியுடன் நிறுவப்பட்ட இந்த தாவரவியல் சேமிப்பு வங்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச கோலாகலமாக தொடக்கி வைத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞானிகளின் கண்காணிப்பில் இது செயற்படும்.

தாவரங்கள் பல ஆண்டுகள் வாழ்வதில்லை. குறுகிய காலத்தில் மடிந்து போகின்றன. அபூர்வமான தாவரங்களையும் மருந்துச் செடிகளையும் இவ்வங்கியில் சேமிக்கலாம்.

இதனால் பல ஆண்டுகளுக்குப் பின்பும் இவைகளை உபயோகிக்கும் வாய்ப்புகள் உண்டு. இத்துடன் உணவு தானிய தாவரங்களையும் உடனடியாக மடிய விடாது மருத்துவ ரீதியில் இவ்வங்கி பராமரிக்கும்.

1985 ஆம் ஆண்டு "சோயாகம" என்ற விதை, கண்டுபிடிக்கப்பட்டது. இது நைரோபியில் எவரது கவனமுமில்லாமல் வளர்ந்து வந்தது. இதனை அறிந்து வெளிநாட்டு விஞ்ஞானிகள், அங்கு சென்று ஆராய்ச்சிகளை நடத்தினர். இதனுடைய விதைகளையும் தாவரத்தையும், வெளிநாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

இதையடுத்து வெளிநாட்டு விஞ்ஞான நிறுவனம் பல லட்சக்கணக்கான ரூபாய்களை லாபமாக ஈட்டியுள்ளது.

மூன்றாம் மண்டல நாடாகிய நைரோபியில் மக்களிடையே இருந்து வந்த வேலையில்லாப் பிரச்சினை தீர்ந்தது. மக்களிடையே பணப் புலக்கமும் ஏற்பட ஆரம்பித்தது.

இதே போல் நம நாட்டில் அபூர்வமான தாவரங்களும தானிய தாவரங்களும ஆயுள் வேத மருத்துவ செடிகளும விதைகளும உள்ளன.

இவைகளை இமமாதிரியான தாவரவியல் சேமிப்பு வங்கியில் விஞ்ஞான முறையில் பாதுகாக்கலாம. இவைகளின் சிறப்பியல்புகளை விஞ்ஞான ரீதியான முறையில் ஆராயலாம.

விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டு வரும, தாவரங்களுக்கும விதைகளுக்கும ஆயுள்வேத மருந்து செடிகளுக்கும அபிவிருத்தி அடைந்த வரும் நாடுகளில் நல்ல சந்தை வாய்ப்பு உண்டு.

நமது நாட்டின் உணவுகள் தானிய வகைகள் 1200 வருடங்கள் பழமை வாய்ந்தவை. கோதுமை, பார்லி போன்றவைகளை கிழக்கிலிருந்தும "சோயா" அரிசி போன்றவைகளை சீனாவிலிருந்தும உருளைக் கிழங்கு போன்றவைகளை லத்தீன் அமெரிக்காவிலிருந்தும தருவித்து நமமுடைய உணவாக உண்டோம.

இன்றைக்கு நம நாட்டிலிருந்து இவைகளில் சிலவற்றை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் இமமாதிரியான தாவரவியல் சேமிப்பு வங்கிகள் இயங்கி வருகின்றன.

உணவுத் தானியங்களின் ஆராய்ச்சிக்கு தாவரவியல் சேமிப்பு ஒரு அடிக்கல்லாகும.

இவ்வங்கியில் ஆராய்ச்சி செய்யப்பட்ட பின்னர், விதைகள் உணவுத் தானிய விதைகள். ஐக்கிய நாட்டு சபையின் மூலமாக உலக நாடுகளுக்கு அனுப்பப்படும. (ம—455)

## விடுமுறைகள் குறைப்பு

அரசாங்க ஊழியர்களின் வேலை நாட்கள் மற்றும வேலை நேரங்கள் தொடர்பாக அரசிடம பல சிபார்சுகளும யோசனைகளும சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

பல பிரிவுகளில் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட இவற்றை அரசாங்கம தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

இந்த சிபார்சுகளும யோசனைகளும அரசினால் ஏற்றுக்கொள்ளப்படின் அரசாங்க ஊழியர்களின் வருடாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்படலாம.

அவர்களின் தினசரி வேலை நேரமும 45 நிமிடங்களினால் அதிகரிக்கப்படலாம.

அரசாங்க ஊழியர்களின் வருடாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 45இல் இருந்து 30 ஆகக் குறைக்கப்படும.

அதே வேளை அவர்களின் வருடாந்த வேலை நாட்களின் எண்ணிக்கையும 186 இல் இருந்து 216 ஆக அதிகரிக்கப்படும.

அரசின் பரிசீலனையில் இருக்கும உத்தேச திட்டம செயல் முறைப்படுத்தப்படுமாகில், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும. மேமபாட்டுக்கும பெரிதும உதவும.

இலங்கையில் அரசாங்க ஊழியர்கள் அனுபவித்து வருவது போன்ற உலகில் எந்த ஒரு நாட்டிலும அரசாங்க ஊழியர்களுக்கு அதிக எண்ணிக்கையான விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை.

இலங்கை போன்ற ஒரு ...

## சைவ சமய பாட பரீட்சையின் பரிசளிப்பு விழா

கொழும்பு, மே 24

கொழும்பு விவேகானந்த சபையினரால் கடந்த ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சைவ சமயப் பாடப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று 26ஆம திகதி (சனிக்கிழமை) காலை 9–30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சபைத் தலைவர் வைத்திய கலாநிதி க வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோரின் ஆசியுடன் விழா ஆரம்பமாகும். [ஐ—ர]

## கிறிஸ்தவ



## நினைவுப் பரிசு வழங்கல்

நிந்தவூர் பிரதம தபாலகத்தில் பதில் தபாலதிபராகக் கடமையாற்றி, கல்முனை பிரதம தபாலகத்திற்கு இடமாற்றம பெற்றுள்ள திரு ரீ அரசகுலசிங்கத்திற்கு நிந்தவூர் தபாலக ஊழியர்களால் பிரிவுபசார வைபவம ஒன்று நடத்தப்பட்டது.

வைபவத்திற்குத் தலைமை வகித்த உதவித் தபால் அதிபர் ஜனாப் ஏ எல் முகமமதுத்தமபி ஊழியர்கள் சார்பில் திரு அரசகுலசிங்கத்திற்கு நினைவுப் பரிசு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காண்க.

## தமிழ் மொழியில் அறிவியல் நூல்கள் வெளியிடப்பட வேண்டும்

### கல்வி அதிகாரி உரை

புங்குடுதீவு, மே 24

"இருபத்தோராம நூற்றாண்டில் வாழப் போகும இன்றைய மாணவர்கள் அறிவியல் துறையில் மிக்க தேர்ச்சி பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் தமிழ் மொழியில் அறிவியல் துறை சார்ந்த நூல்கள் பல வெளியிடப்பட வேண்டும்.

இவ்வாறு கூறினார் கல்வி அதிகாரி திரு த துரைசிங்கம.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ்த் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு இவ்வாறு அவர் தமது உரையில் வலியுறுத்தினார்.

பிரஸ்தாப வித்தியாலய தமிழ் மன்ற உபதலைவி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வித்தியாலய அதிபர் திரு மு இராமலிங்கம அசிரியர் திரு எஸ் செல்வரத்தினம உட்பட மற்றும பலரும உரையாற்றினர்.

மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளும இடமபெற்றன. [ஐ—240]

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

நிந்தவூர், மே 24

## செய்தித் திரட்டு

### ரூ. 1½ லட்சம் நிதி ஒதுக்கீடு

புத்தளம், மே 24

ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரான அல்ஹாஜ் என் எம புஹாருத்தீன் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து புத்தளம சாஹிரா தேசியக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

சுமார் ஒன்றரை லட்சம ரூபா பணத்தை ஜனாப் புஹாருத்தீன் நிதியுதவியாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

இந்தத் தொகையை ஆரமப மூலதனமாக வைத்து 100X20 அளவுள்ள கட்டிடமொன்று நிறுவப்படவுள்ளது. (ஐ—241)

### புனரமைப்பு முதற் கட்டம்

கொழும்பு, மே 25

முதற்கட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணம - திருகோணமலை - வவுனியா ஆகிய பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட இருக்கின்றன. என தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இதனால் மட்டக்களப்புக்கு தற்போது எதுவித தொலைத் தொடர்பு அபிவிருத்திப் பணிகளும மேற்கொள்ளப்பட முடியாதுள்ளது என அறியவருகிறது. (ஐ—404)

### வருடாந்த கட்டணம் குறைவு

தமபலகாமம, மே 24

திருகோணமலை மருத்துவ ஐக்கிய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வருடாந்த கட்டணத்தை 200 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக நகரசபை குறைத்துள்ளது.

இதற்காக நகரசபைச் செயலாளருக்கு மேற்படி சங்கம நன்றி தெரிவித்துள்ளது. (ஐ—288)

### பதில் அதிபர்களை

...செயல் முறைப்படுத்தப்படு மாகில், அது நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கும். மேம பாட்டுக்கும பெரிதும உதவும.

இலங்கையில் அரசாங்க ஊழியர்கள் அனுபவித்து வரு வது போன்ற உலகில் எந்த ஒரு நாட்டிலும அரசாங்க ஊழியர்களுக்கு அதிக எண் ணிக்கையான விடுமுறைகள் ...படுவதில்லை.

இலங்கை போன்ற ஒரு அபிவிருத்தி அடைந்த வரும நாட்டில் அதிக எண்ணிக்கை யிலான விடுமுறைகள் ஆரோக் கியமானதாக அமையாது.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைவரும உத் தேச திட்டம செயல்முறைப் படுத்தப்படுவதையே விரும்பு வர்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தினால் சாமபர் மேடாக காட்சியளித்த ஜப் பான் உழைப்பின் சக்தியினால் இன்று கைத்தொழில் நாடா கத் திகழ்கிறது.

நமது நாட்டிலும அரசு மனித மூலவளத்துக்கு முக்கி யத்தவம அளித்து வருகிறது. விடுமுறை நாட்களின் எண் ணிக்கையையும குறைப்பது என்ற உத்தேசித்திருக்கிறது.

அரசின் உத்தேச விடு முறைக் குறைப்பு யோசனை நாட்டைக் கட்டி எழுப்ப உதவும. பொது மக்களின் அசௌகரியங்களையும குறைக் கும.

அதே வேளை இந்த வேலை நாட்களும, வேலை நேரங்களும அக்கபர்வமாகப் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கவும கணிப்பிடவும அரசு ஆவன செய்ய வேண்டும.

அதிதியாகக் கலந்து கொள்வார்—

செல்வி தங்க மா அப்பாக் குட்டி பேராசிரியர் கா கைலாச நாதக் குருக்கள், நல்லை திரு ஞான சமபந்தர் ஆதின முதல் வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசமபந்த பரமாச்சார்ய சுவாமிகள் அதியோரின் ஆசியு டன் விழா ஆரமபமாகும—

[ஐ—ர]

## கிறிஸ்தவ எழுத்தாளரை ஊக்குவிக்கும் திட்டம்

கண்டி, மே 24

மத்திய மாகாண கிறிஸ்தவ எழுத்தாளர் பேரவை நாடு எங்கிலும உள்ள கிறிஸ்தவ எழுத்தாளர்களை ஊக்கு விக்க உள்ளது.

கிறிஸ்தவ எழுத்தாளர்களின் படைப்புகளை நூலுருவில் கொண்டு வரவும, அவற்றை வெளியிட்டு வைக்கவும பேரவை உறுதி பூண்டுள்ளதாக அதன் அமைப்பாளர் திரு தேவதாசன் ஜெயசிங் தெரிவிக்கிறார்.

இதன் முதற்கட்டமாக கிறிஸ் தவ சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தி பரிசுகளை வழங்கவும பேரவை தீர்மா னித்துள்ளது.

சிறுகதைகள் இயேசுவின் பொன் மொழிகள், போதனை கள், உவமைகள் என்ற அடிப் படையில் அமைய வேண்டும எனவும.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் சிறுகதைகளை எழுதி திருச்சபை முதல்வரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் 30-6-90 ஆம திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும. எனவும பேரவை கோரியுள்ளது. (ஐ—017)

## நினைவுப் பரிசு வழங்கல்

நிந்தவூர் பிரதம தபாலகத்தில் பதில் தபாலதிபரா கக் கடமையாற்றி, கல்முனை பிரதம தபாலகத்திற்கு இட மாற்றம பெற்றுள்ள திரு ரீ அரசகுலசிங்கத்திற்கு நிந்த வூர் தபாலக ஊழியர்களால் பிரிவுபசார வைபவம ஒன்று நடத்தப்பட்டது.

வைபவத்திற்குத் தலைமை வகித்த உதவித் தபால் அதிபர் ஜனாப் ஏ எல் முகமமதுத்தமபி ஊழியர்கள் சார்பில் திரு அரசகுலசிங்கத்திற்கு நினைவுப் பரிசு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காண்க.

உதவித் தபாலதிபர் ஜனாப் லாபிரும படத்தில் காணப்படுகின்றார்.

[படம்— ஏ எல் எம சலீம]

(ஐ—217)

கொச்சிக்கடை தமிழ் வித்தியாலயம்;

## பாடசாலை திருத்த வேலைகள் ஆரம்பம்

கொழுமபு, மே 25

நீர்கொழுமபு கொச்சிக் கடை ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயக் கட்டிடம உடைந்து சிதைந்து சீர்கே டான நிலையில் காட்சியளித் ததை யாவரும அறிந்ததே.

அப்பாடசாலைக் கட்டிடத் தைத் திருத்திச் சீரமைத்து அங்கு படிக்கும ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வியில் அக் கறை செலுத்தி தங்களது நிதி யிலிருந்து, இலங்கை தொழிலா ளர் காங்கிரஸின் பொதுச் செய லாளரும, கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான திரு எம எஸ் செல்லச்சாமியும, இ தொ கா கமபஹா மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளரும, மேல் மாகாண சபையின் உறுப் பினருமான திரு ஆர் ஆர் இராமதாஸும, தலா ஒவ் வொரு லட்சமாக ரூபா 2,00,000 பணத்தை கையளித்தார்கள்.

பாடசாலையின் நிலை மோச மாகி மூடவேண்டியதாயும முடி வுகட்டப்பட்டு மூடுவிழாவும திட்டமிட்டபடி நடந்தும விட் டது. விடயத்தைக் கேள்வியுற்ற அமைச்சர் திரு எம எஸ் செல் லச்சாமி, மேல் மாகாண கல்வி அமைச்சர் சுனிமல் ராஜபக்ஷா வுடன் தொடர்பு கொண்டார்.

அப்பணத்தைக் கொண்டு திருத்த வேலைகள் ஆரமபிக்கப் பட்டுள்ளன. (ஐ—ங)

அறிவியல் துறை சார்ந்த நூல்கள் பல வெளியிடப் பட வேண்டும—

இவ்வாறு கூறினார் கல்வி அதிகாரி திரு த துரைசிங்கம—

யாழ் கனகரத்தினம மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ்த் தின விழா சிறப்பாக நடைபெற் றது—

இவ் விழாவில் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு பேசுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்—

திரு துரைசிங்கம தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

தமிழ் மாணவர்களிடையே மொழித் திறன் குன்றி வருவது கவலைக்குரியதென்றும, இந் நிலையினை மாற்றிட ஆசிரியர் கள் கணிசமான பங்கு வேண்டுமென் றும கேட்டுக் கொண்டார்—

மாணவர்களிடம காணப் படும ஆற்றல்களைக் கண்ட றிந்து அவற்றை மேன்மேலும விருத்தி செய்ய ஆசிரியர்கள் ஊக்கமளிக்க வேண்டும—

கவிதை, கட்டுரை, நாடகம, சிறுகதை, போன்றவற்றை எழுது மாணவர்களுக்குப் பாடசாலை களில் ஊக்குமளிக்கப்பட வேண் டும—

... செல்வரத்தினம உட்பட மற் றும பலரும உரையாற்றினர்— மாணவர்களின் இசை நிகழ்ச்சி களும இடமபெற்றன—

[ஐ—240]

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

நிந்தவூர், மே 24

கல்முனை மாவட்ட சர்வோ தய மததிய நிலையத்தின் அனுச ரணையுடன் நிந்தவூரில் சூழல் பாதுகாப்பு சமபந்தமான கருத் தரங்கு ஒன்று நடைபெற இருக் கின்றது.

இன்று 26ஆம திகதி நிந்தவூர் அல்—மஸ்ஹர் பெண்கள் உயர் தரப் பாடசாலையில் கருத் தரங்கு நடைபெறும.

சர்வோதய இயக்க நிந்த வூர்ப் பிரதேச இணைப்பாளர் ஜனாப் ஐ எம தஸ்தகீர் தலை மையில் நடைபெறவிருக்கும இந் தக் கருத்தரங்கில், காரைதீவு, நிந்தவூர்ப் பகுதிகளைச் சேர்ந்த சர்வோதய சாந்திசேன அங்கத் தவர்கள் கலந்து கொள்வர்.

(ஐ—217)

... சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க வருடாந்த கட்ட ணத்தை 200 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக நகரசபை குறைத்துள் ளது.

இதற்காக நகரசபைச் செய லாளருக்கு மேற்படி சங்கம நன்றி தெரிவித்துள்ளது.

(ஐ—288)

## பதில் அதிபர்களை நிரந்தரமாக்குக

ஏறாவூர், மே 24

அரசாங்கப் பாடசாலை களில் பதில் அதிபர்களாக கட மைபுரியும அனைவரும, நிபந் தனைகள் ஏதுமின்றி நிரந்தர அதிபர்களாக நியமனம செய் யப்படல் வேண்டும.

இவ்வாறு கோரும தீர்மா னம ஒன்றை ஏறாவூர் வடக்கு அதிபர்கள் சங்கம கல்வி அமைச் சரின் கவனத்திற்கு அனுப்பி வைத் துள்ளது.

கல்வி அமைச்சர் இவ்விடயத் தில் நல்லதொரு முடிவினை மேற் கொள்ள வேண்டும எனவும தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ—073)

அறனாயக்காவில்

## குழாய் நீர் விநியோகமின்றி பொதுமக்கள் அவதி

அறனாயக்க நீர் விநியோகத் திட்டத்தில் கடந்த ஒரு வார மாக குழாய் நீர் விநியோ கம தடைப்பட்டுள்ளது—

இதனால் மக்கள் பெரும அசௌகரியத்துக்கு ஆளாகியுள் ளனர்—


அண்மையில் அறனாயக்கா திப்பிட்டிய பிரதேசத்தில் பெய்த கடும மழை காரணமாக இந் நிலை ஏற்பட்டிருக்கிறது—

பிரதான குழாயில் மண் அடைபட்டு இருப்பதனால் அதனை வெளியேற்றுவதில் பெரும சிரமம ஏற்பட்டிருக்கி றது—

குழாய் நீர்த் திட்டம ஆரம பிக்கப்பட்ட பின் பொது மக்கள் கிணற்று நீர் பாவனையை முற் றாகக் கைவிட்டு விட்டனர்— இத னால் தற்போது கிணற்று நீரை யும பயன்படுத்த முடியாதிருக் கிறது—

திப்பிட்டிய நகரில் உள்ள பொது வைத்தியசாலையும அசுத்தமாகக் காட்சியளிக்கிறது பொது மலசலகூடம அமைந் துள்ள பகுதிக்கு செல்லமுடிய வில்லை— ஒரே துர்வாடை வீசுகி றது—

எனவே மக்களின் நலன் கருதி கூடிய விரைவில் குழாய் நீரைப் பெற்றுக் கொள்ள சம பந்தப்பட்ட அதிகாரிகள்




ஆவன செய்ய வேண்டும—

எம ஆர் எம மஹ்ரூப். திப்பிட்டிய—

## பெற்றோரை இழந்த பிள்ளைகள் விவரம் சேகரிப்பு

கோப்பாய், மே 24

யாழ் மாவட்ட பாடசாலை களில் கல்வி கற்கும மாணவர் களில் தாய் - தந்தையர் இருவ ரையும இழந்த பிள்ளைகளின் விவரம சேகரிக்கப்படுகின்றது.

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம அதற்கென தயா ரிக்கப்பட்ட விசேட படிவத்தின் மூலம சகல பாடசாலை அதிபர் கள் மூலமும பெற்றோரை இழந்த மாணவர்களின் விவரங் களை சேகரித்து வருகின்றது.

பெற்றோரை இழந்த பிள்ளை களுக்கு விசேடமான சில உதவி கள் சலுகைகள் வழங்குவதற்கு வசதியாக இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன.

(ஐ—142)

## தங்க பாளங்கள் கடத்தல் முறியடிப்பு

கொழுமபு, மே 25

120 தங்கப் பாளங்களை கடத்தி வர முற்பட்டதாகக் கூறப்படும விமானப் பயணி ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதி காரிகளிடம அகப்பட்டார்.

துபாயிலிருந்து வந்திறங்கிய விமானம ஒன்றில் வந்த இலங் கையரிடமே இந்த தங்கப் பாளங்கள் காணப்பட்டன.

இந்த தங்கப் பாளங்களின் மொத்த பெறுமதி 60 லட்சம ரூபாவாகும. விமான நிலைய சுங்க அதிகாரிகள் இத் தகவ லைத் தெரிவித்தனர். (ண—வ)

# இந்தியாவுடன் யுத்தம் தவிர்க்கப்பட முடியாததல்ல

## பெனாஸிர் பூட்டோ அறிவிப்பு

இஸ்லாமாபாத், மே 25

இந்தியாவுடன் யுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியம் தோன்றியுள்ளது. இது தவிர்க்கப்பட முடியாததல்ல இவ்வாறு கூறினார் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பெனாஸிர் இவ்வாறு கூறினார்.

எட்டு நாடுகள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு பெனாஸிர் வியாழனன்று பாகிஸ்தான் வந்தடைந்தார்.

பத்திரிகையாளர் முன்னிலையில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது—

மனோ ரீதியான யுத்தமொன்றுக்குத் தயாராகுமபடி அண்மையில் இந்தியப் பிரதமர் வி பி சிங் கூறினார்.

அவரது கூற்றைக் கேட்ட பின்தான் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட இச்சுற்றுலாவை நான் மேற்கொண்டேன்.

இரண்டு நாடுகளிலும் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளது—



பெனாஸிர் பூட்டோ

நது. காஷ்மீர் மக்கள் கோரும சுய நிர்ணயம பற்றி இந்தியா சிந்திக்க வேண்டும.

பிளவுகள் மூலம எதனையும சாதித்துவிட முடியாது. ஆனால் தென் ஆசியாவில் கூட்டுறவின் மூலமே அதிசயங்களைக் காண முடியும.

காஷ்மீர் எழுச்சியை படைபலத்தைக் கொண்டு அடக்க முடியாத நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

காஷ்மீருக்கு சுதந்திரம மறுக்கப்பட்டால் அது உப கண்டத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தலாம.

இவ்வாறு பெனாஸிர் கூறினார். (எ)

## இந். துருப்புகளைக்கட்டுப்படுத்தி வைத்திருக்க அமெ. பணிப்பு

புதுடில்லி. மே 25

நிராயுதபாணிகளான காஷ்மீர் தீவிரவாதிகளை அடக்க முயலும் இந்திய துருப்புகளை கட்டுப்படுத்தி வைக்குமாறு அமெரிக்கா கேட்டிருக்கிறது—

அமெரிக்க ராஜாங்க அமைச்சு இது தொடர்பான அறிக்கையொன்றை வியாழனன்று விடுத்தது—

மேற்படி அறிக்கை இந்தியாவை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது—

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட காஷ்மீர் முஸ்லிம்களின் பிரதம மத குரு மௌலவி மொகமட் பாரூக்கின் பிரேத ஊர்வலத்தின் போது இந்திய துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம செய்தன—

இந்தச் சம்பவம் நடந்து இரு தினங்களின் பின்னரே அமெரிக்கா மேற்படி அறிக்கையை விடுத்தது—

பாரூக் சிறுவனொன்றான அவரது ஸ்ரீநகர் இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்—

அமெரிக்கா விடுத்திருக்கும அறிக்கை பற்றி வியாழனன்று கருத்து வெளியிட்ட இந்திய வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் கூறுவார் —

அமெரிக்கா வெளியிட்டிருக்கும கருத்துக்கள் எமக்கு அச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்றும் கூறினார்—

காஷ்மீர் சுதந்திரத்திற்காக தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்— அதைப் பற்றி அமெரிக்கா எதுவுமே கூறவில்லை என அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்— [எ]

### இஸ்ரவேலுக்கெதிராக
## பலஸ்தீனர்கள் டயர்களை எரித்து வீதிகளில் ஆர்ப்பாட்டம்

காஸா மே 25

பலஸ்தீனர்கள் டயர்களை எரித்தும, கற்களை எறிந்தும பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்—

காஸா தொடுவாயில் இரண்டு மணி நேரம ஊரடங்கு தளர்த்தப்பட்டது— அவ்வேளையில் இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பலஸ்தீனர்கள் ஈடுபட்டனர்—

காஸா தொடுவாய் பகுதியில் இராணுவ நிலைகளை பலஸ்தீனர்கள் கற்களை வீசித் தாக்கினர்—

இராணுவம ஆர்ப்பாட்டக்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம செய்தது— சுமார் 24 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்—

காஸா தொடுவாய் பகுதி மக்கள் தமக்குத் தேவையான பொருள் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஊரடங்குச்

## ஸிம்பாப்வே ஆசிரியர்கள் அதிக சம்பளம் கோரி வீதிகளில் ஊர்வலம்

ஹராரே மே 25

அதிக சம்பளம கோரி ஸிம்பாப்வே பாடசாலை ஆசிரியர்கள் ஊர்வலமொன்றை நடத்தினர்—

மத்திய ஹராரே ஊடாக ஊர்வலம சென்றது—

சினாவில் பிறந்த கல்வி அமைச்சர் மீண்டும சினாவுக்குத் திரும்பிப் போக வேண்டும—

இவ்வாறு அவர்கள் கோஷமெழுப்பினர்—

கல்வி அமைச்சுக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டமொன்றையும அவர்கள் ஆரமபித்தனர்—

3,000 க்குமதிக ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டதாகப் பொலிஸார் கூறினர்—

பொலிஸார் ஊர்வலத்தை கலைக்க முயற்சி மேற்கொள்ளவில்லை— (எ)

## போபர்ஸ் ஆயுத ஊழல்: சுவீடன் ஆவணங்களை மேசை மீது வைக்கும்படி காங். உறுப்பினர் பணிப்பு

புதுடில்லி, மே 25

சர்ச்சைக்குரிய போபர்ஸ் ஆயுத ஊழல் சமபந்தப்பட்ட சகலவிதமான சுவீடன் தேசிய கணக்கியல் ஆவணங்களையும நாடாளுமன்ற மேசை முன் இன்று வைக்கப்பட வேண்டும—

இவ்வாறு காங்கிரஸ் உறுப்பினர் வசந் சாத்தே கோரிக்கை விடுத்தார்—

வியாழனன்று நாடாளுமன்றம கூடியபோதே இக் கோரிக்கையை அவர் விடுத்தார்—

ஆனால் அவரது கோரிக்கையை பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங்கின் அரசாங்கம ஏற்க மறுத்துவிட்டது—

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் வசந் சாத்தே அமைச்சராக இருந்தார்—

